[2018 ஜனவரி 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மடத்துக்குளம் தொகுதியில் நீதிமன்றம் அமைப்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரையைப் பெற்றுதான் அங்கு புதிய நீதிமன்றம் உடனடியாக அமைப்பதற்கு அரசு ஆணைகளைப் பிறப்பித்திருக்கின்றது. அதற்கான மேல் நடவடிக்கைகளை, அதாவது அதற்கான தகுந்த இடத்தைத் தேர்வு செய்து மாவட்ட நிருவாகம் அளித்த பிறகு உயர் நீதிமன்றம், அங்கு நீதிமன்றம் அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் விரைவிலே மேற்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை உயர் நீதிமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று விரைவிலே அந்த நீதிமன்றம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

36—

பின்னலாடைப் பூங்கா

***6391—திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வடக்கு தொகுதியில் பின்னலாடைப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

2018 ஜனவரி 12]

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வடக்கு தொகுதியில் பின்னலாடைப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே நல்லாட்சி நடத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு தொகுதி, திருப்பூர் மாநகரம், பின்னலாடைத் தொழிலுக்குப் பெயர் பெற்ற நகரம் ஆகும். திருப்பூர் நகரம், அங்கு செயல்பட்டு வரும் பனியன் மற்றும் பின்னலாடைத் தொழில்கள்மூலம் ஆண்டொன்றுக்கு அந்நிய செலாவணியாக ரூ.25,000 கோடியையும் மற்றும் அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் பனியன் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற தொழிலாளர்கள்மூலம், உள்நாட்டு பனியன் விற்பனைமூலம் ரூ.10,000 கோடியையும் வருவாயாக ஈட்டித் தருகின்றது.

முற்பகல் 10–50

அந்த வகையிலே, திருப்பூர் நகரத்திற்கு வெளியூரைச் சேர்ந்தவர்களும், வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் அதிகம்பேர் வேலைக்கு வருகின்றனர். திருப்பூர் நகரத்தில் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளதால், இட நெருக்கடியும், போக்குவரத்து நெருக்கடியும் அதிகமாக உள்ளது. திருப்பூர் நகரத்திலே சிட்கோ தொழிற்பேட்டை ஒன்று வணிகத்திற்காகவும் ஏற்றுமதி வணிகத்திற்காக Nethaji Apparel Park *ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. தொழில் வளர்ச்சிபெறும் நிலையில், இட நெருக்கடியும், போக்குவரத்து நெரிசலும் அதிகமாக உள்ள காரணத்தினால் தொழில் வளர்ச்சியடைவது தடைபடுகிறது. மேலும், பின்னலாடைக்கென்று தனியாக ஒரு*

தொழிற்பேட்டை இல்லை. பின்னலாடைக்கென்று தனியாக ஒரு தொழிற்பேட்டையைத் துவங்கினால் ஆயிரக்கணக்கான குறு, சிறு தொழிலதிபர்களும், பணிபுரியும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களும் பயன்பெறுவார்கள். அந்த வகையிலே, அம்மா அவர்களுடைய அரசு திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியிலே புதிதாகப் பின்னலாடைப் பூங்கா ஒன்றை ஏற்படுத்தித் தருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் ஜவுளித் தொழிலில் ஒரு முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. குறிப்பாக, திருப்பூர் மாநகரம் ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைத் தொழிலுக்குப் புகழ்பெற்றுள்ளதுடன், சுமார் 36 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதியும், உள்ளூர் வர்த்தகமும் செய்து இந்தியாவிலேயே முதன்மையாக விளங்குகிறது.

அதுமட்டுமல்ல, திருப்பூர் மாவட்டத்தில் நிலவிய சாயக் கழிவுநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் மைய அரசோடு கலந்துபேசி, 703 கோடி ரூபாய் அளவிற்கு நிதியுதவி அளித்து, கடன் சுமையைக் குறைத்து 18 பொது சாயக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்துக் கொடுத்து, இந்தத் தொழிலைப் பாதுகாத்துள்ளது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு.

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு தொகுதியில் உள்ள நியூ திருப்பூர், ஈட்டிவீரம்பாளையத்தில் ரூபாய் 17.62 கோடி மதிப்பீட்டில் நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா ஒன்றும், பல்லடத்தில் ரூபாய் 55.42 கோடி மதிப்பீட்டில் ஓர் உயர் தொழில்நுட்பப் பூங்காவும், அவிநாசி தொகுதி, செங்கம்பள்ளியில் ரூபாய் 149.45 கோடி மதிப்பீட்டில் ஓர் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காவும், உடுமலைப்பேட்டையில் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டமும் என 4 பூங்காக்கள் திருப்பூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. எனினும், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மேலும் ஒரு பின்னலாடைப் பூங்கா அமைத்துத் தர

2018 ஜனவரி 12]

கோரிக்கை அளித்துள்ளதன் அடிப்படையில், அவரும் முயற்சி செய்து, அப்பகுதியிலுள்ள தொழில்முனைவோர்கள் பூங்கா அமைக்க முன்வருவார்களாயின், அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும். நடைமுறையில் உள்ள ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா விதிமுறைகளின்படி, அதாவது, குறைந்தது 50 ஏக்கர் நிலமும், 25 தொழிற்கூடங்களும், குறைந்தது ரூ.60 கோடி முதல் ரூ.65 கோடி வரை மூலதனமும் தேவைப்படுகிறது. இதில், மைய அரசு 40 சதவிகித மானியமும், மாநில அரசு 9 சதவிகித மானியமும் வழங்குகிறது. மீதம் இருக்கிற 51 சதவிகித தொகையை முதலீட்டாளர்கள் தாங்களாகவோ அல்லது வங்கிகள் மூலமாகவோ கடன்பெற்று தொழில் தொடங்க முன்வருவார்கள் என்று நீங்கள் குறிப்பிட்டுச் சொல்வீர்களென்றால் அல்லது மாவட்ட ஆட்சியர் மூலமாகத் தெரிவிப்பீர்கள் என்று சொன்னால், உடனடியாக உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

வீட்டுமனைப் பட்டா

***932—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—